குன்றக்குடி

# திருவண்ணாமலை ஆதீன அருள் நெறித் திருப்பணிகள்

குன்றக்குடி
இராமநாதபுர மாவட்டம்
1966

குன்றக்குடி

# திருவண்ணாமலை ஆதீன அருள் நெறித் திருப்பணிகள்

1. ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களே அன்பர்கள் விரும்புகின்ற இடங்களுக்கு நேரிடையாகவே எழுந்தருளி பிரசாரம் செய்து வருகிறார்கள். இந்த வகையில் சராசரியாக திங்கள் ஒன்றுக்கு 20 கூட்டங்களில் கலந்துகொள்கிறார்கள். சராசரி திங்கள் ஒன்றுக்குக் குறைந்தது 3000 மைல்கள் பிரயாணம் செய்கிறார்கள். சற்றேறக்குறைய 2 இலட்சம் மக்களை திங்கள் தோறும் சந்திக்கிறார்கள். தமிழ் நாட்டில் ஏறத்தாழ எல்லாப் பகுதிகளிலும் இவ்வகையில் சுற்றுப்பயணம் செய்திருக்கிறார்கள். மேலும் இதன் தொடர்பாக பாரத நாடு முழுவதிலும், கிழக்காசிய நாடுகள் முழுவதிலும் சுற்றுப் பயணம் செய்து அழகு தமிழால் ஆன்ற சைவ நெறி பரப்பி வருகிறார்கள். பயணங்களில் சில பொழுது குறிப்பிட்ட வட்டாரங்களில் கால்நடையாகவும் யாத்திரை செய்திருக்கிறார்கள். செய்துவருகிறார்கள்.

2. சமயப் பிரசாரத்திற்கென்று பெரிய அளவில் அமைக்கப்பெற்ற அருள்நெறித் திருக்கூட்டம் என்ற அமைப்பு ஆங்காங்கு கிளை பல கொண்டு வேலை செய்துகொண்டிருக்கிறது. அவை முறையாக மாநில, மாவட்ட, வட்ட, நகர, கிராம அமைப்புகளாக அமைந்து வேலை செய்து வருகின்றன. இந்த

அமைப்பில் சற்றேறக்குறைய 200 கிளைகளும் 3000 உறுப்பினர்களும் இருக்கின்றனர். இந்த அமைப்புகள் ஆங்காங்கு வார வழிபாடுகள், கூட்டுப் பிரார்த்தனை, திருக்கோயில் தொண்டு, திருத்தல யாத்திரை, சமய விழாக்கள், சமூகத் தொண்டுகள் ஆகியவற்றைச் செய்து வருகின்றன.

அருள்நெறித் திருக்கூட்ட அமைப்புகள் பாரதத்தில் மட்டுமின்றி இலங்கையிலும், மலாயாவிலும் தோற்றுவிக்கப்பெற்றுள்ளன.

சமய விழா

3. சமயத் திருவிழாக்களை வரலாற்று உணர்வோடும் தத்துவக் குறிப்போடும் இணைந்தவாறு நடத்தவேண்டும். அதாவது, அன்றைய வரலாற்றை நினைவுகூறும் வண்ணம் நிகழ்ச்சி மூலமாக நடத்துதல். உதாரணமாக, பிட்டுக்கு மண் சுமந்த விழாவை மண் சுமக்கும் வேலை செய்யும் சமுதாய விழாவாக நடத்திப் பிட்டு வழங்கவேண்டும். குன்றக்குடியில் இவ்விழா இம்முறையில் பல ஆண்டுகளாக நடைபெறுகிறது.

4. சமயப் பிரசாரம் என்பது தொண்டுகளின் வழியாக நிகழ்வதுதான் சிறப்பு என்ற தத்துவத்தின் அடிப்படையில் - சமயத்தின் அடிப்படையில் சமூக முன்னேற்றத்திற்குரிய பல காரியங்களைச் செய்ய அருள்நெறித் திருப்பணி மன்றம் என்ற நிர்மாண வேலைகளைச்செய்யும் இயக்கம் பதிவு செய்யப்பெற்று திருப்பணிகளை சமூக ரீதியான வேலைகளைச் செய்து வருகின்றது. இந்தத் திருப்பணி மன்றத்தின்

பொறுப்பில் தேவாரப் பாடசாலை, ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகள், ஆரம்ப உயர் தொடக்கப் பள்ளிகள், உயர் நிலைப் பள்ளிகள், ஏழை மாணவர் விடுதிகள், பின் தங்கிய மாணவர் விடுதி கள், கட்டணம் கட்டி பயிலும் விடுதிகள், இளைஞர் மன்றங்கள், மாதர் சங்கங்கள், தொழுநோய் விடுதி, மருத்துவ நிலையம் முதலிய பல அமைப்புகள் இயங்குகின்றன. அத்தோடு சமய ஒழுக்கத்தில் நம்பிக்கையுள்ள மாணவர்கட்கு உபகாரச் சம்பள மும் வழங்கப் பெறுகின்றது. இந்த அமைப்பில் சற்றேறக்குறைய 20-க்கு மேற்பட்ட அமைப்புகள் வேலைசெய்து கொண்டிருக்கின்றன. மேலும் அருள் நெறித் திருப்பணி மன்றத்தின் தொடர்பாக சமூக பொருளாதார முன்னேற்றத்திற்குத் துணை செய்யக் கூடிய பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களும் தொடங்கப்பெற்று பணியாற்றி வருகின்றன. குறிப் பாகக் கருங்கல் உடைக்கும் தொழிலாளர் கூட்டுறவு சங்கம்வரை தவத்திரு அடிகளார் அவர்கள் தலைவ ராக இருக்கிறார்கள்.

5. நமது மத வளர்ச்சிக் குறைவுக்கும் மத மாறுதலுக்கும் காரணமாக இருப்பது தீண்டாமையே யாகும்! இதை ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் கருத்திற்கொண்டு அரிசன சேவா சங்கம் அமைத்து தீண்டாமை ஒழிப்புக்கும் தீண்டப்படாதார் என்போ ரின் முன்னேற்றத்திற்கும் அரிய பணிகள் செய்து வருகிறார்கள். சேரிகளுக்கு நேரிலே சென்று அவர்களோடு கலந்து பழகி ஆறுதல் கூறி வழிபாட் டில் ஈடுபடுத்தி அவர்களுக்குக் குடியிருக்க மனையி

விருந்து உழும் நிலம் வரை கிடைப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து துணை செய்து வருகிறார்கள். இதன் காரணமாக இந்தியப் பேரரசு, இந்தியப் பேரரசின் தாழ்த்தப்பட்டோர் நலன் கருதும் ஆய்வுக் குழுவில் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களை உறுப்பினராக எடுத்துக்கொண்டுள்ளது. தமிழ்நாடு அரிசன நல சேவா சங்கத்தில் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் பங்கு பெற்றுள்ளார்கள்.

6. இன்றைய எழுத்தாளர்களே சமுதாயத்தில் கருத்தைத் தோன்றுவிக்க வலிமை சான்ற கருவிகள், அவர்கள் திசை தவறினால் ஒன்றும் சரியாக நடைபெறாது. ஆதலால் இராமநாதபுரம் மாவட்ட தமிழ் எழுத்தாளர் சங்கம், அகில இந்திய தமிழ் எழுத்தாளர் சங்கம் ஆகியவைகளில் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் முக்கிய பொறுப்பேற்று எழுத்துத் துறையிலும் பணியாற்றுவதுடன் அத்துறையிலுள்ள பிறரையும் சமயத் துறையில் ஈடுபட்டுப் பணியாற்றத் துணை புரிகிறார்கள்.

பொதுவாக சைவ மடங்களுக்குள் இணைப்பில்லாதது ஒரு பெரிய குறை.

அக்குறையை உணர்ந்த ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் தமிழகத்தின் எல்லாத் திரு மடங்களுக்கும் சென்று, ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானங்களைக் கண்டு உறவு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தில் பல திரு மடங்கள் அருள் நெறித் திருப்பணியில் ஈடுபட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம். சிறப்பாக

பேரூர் சாந்தலிங்க அடிகளார் திரு மடம், சிரவண புரம் கௌமார மடாலயம், குன்னூர் சற்குரு சமாஜ் சேவா சங்கம் ஆகியவைகள் பாராட்டுதற்குரிய பணி களைச் செய்துவருகின்றன.

சாந்தலிங்க அடிகளார் திருமடம் சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியையும், சிரவணபுரம் கௌமார மடாலயம் உயர்நிலைப்பள்ளியொன்றை யும் நடத்தி வருகிறது.

## திருமுறை

தமிழ் தெய்வமொழி. திருவருள் தவமொழி. அம்மொழியில் மிகச்சிறந்த சிவானுபூதிச் செல்வர் கள் அரிய திருமறைகளை அருளிச் செய்திருக்கிறார் கள். திருமுறைப் பயிற்சியை நாடுமுழுவதும் பரப் பப் பல்வேறு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப் பெறு கின்றன. ஆதீனக் கோயில்களிலும், அருள்நெறித் திருப்பணிக் கல்வியகங்களிலும் திருமுறைப் பாடல் கள் முறையாகப் பயிற்றுவிக்கப் பெறுகின்றன. அத் தோடு திருமுறை விழா, திருவாசக விழா முதலியன சிறப்பாக எடுக்கப்பெறுகின்றன. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நி தானம் அவர்கள், திருப்பதிகம் பெற்ற திருத்தலங் களுக்கு அருள்நெறித் திருக்கூட்ட அடியார் கூட் டத்தோடு திருத்தல யாத்திரை செய்து உழவாரத் திருப்பணி, மற்றும் சமயப் பணிகள் செய்து வரு கிறார்கள். பலர் பாராயணம் செய்வதற்கு உதவி யாக திருமுறைத் திரட்டுக்கள் அவ்வப்போது வெளி யிடப் பெறுகின்றன. திருவாசகம் சிவபுராணம் தொடர் பாராயண இயக்கம் நினைவிற் கொள்ளத் தக்கது. தமிழகத்தின் எல்லாச் சிவாலயங்களிலும்

வழிபடுவோர் தூய திருவருட் சிந்தனையில் ஈடுபட 'திருமுறை அருச்சனை'யை திருமுறைக்காவலர் செம்மனச் செல்வர் மா. ச. சாரங்கபாணி முதலியார் அவர்கள் துணையுடன் தொடங்கி வைக்கும் வாய்ப்பை அருள்நெறித் திருக்கூட்டத்திற்குத் திருவருள் வழங்கியது.

## திருக்குறள் பிரச்சாரம்

தமிழகத்தின் தனிமறையாக—உலகப் பொது மறையாகத் திகழ்வது திருக்குறள். திருக்குறள் ஓர் ஒப்பற்ற இலக்கியம்—அற நூல்—ஒழுக்க நூல்—சமய நூல்—ஞான நூல். திருக்குறள் கருத்து நாடு முழுதும் பரவினால் நல்ல சமயப் பண்பு வளரும். இதனைக் கருத்திற் கொண்டு ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் திருக்குறள் தொடர்பாக அரிய விரிவுரைகள் நிகழ்த்தியும் நூல்கள் எழுதியும் தொண்டு செய்துவருகிறார்கள். நாடு முழுதும் இருக்கிற திருக்குறட் கழகங்களின் மையமாக இயங்கும் 'திருக்குறள் பேரவை'யின் தலைமைப் பொறுப்பையும் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களே ஏற்றுத் தொண்டுசெய்து வருகிறார்கள்.

## சமூகப் புரட்சி

ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் சமூகத் துறையில் தீவிரமான கருத்துடையவர்கள். ஆதலால், சமூக சீர்திருத்த இயக்கங்களிலுள்ள கடவுள் நம்பிக்கையில்லாமல் இருக்கிற அன்பர்களும், நண்பர்களும் கூட தவத்திரு அடிகளார் அவர்களிடம் நெருங்கிய தொடர்புடையவர்களாக இருக்கிறார்கள்.

வினோபாஜி அவர்களின் சர்வோதய இயக்கத் தோடும் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களுக்கு நெருங்கிய தொடர்புண்டு. அவர்களோடும், அவர் களின் தொண்டர்களோடும் இணைந்து பாதயாத் திரை செய்து 'பூமிதான இயக்கம்' வளரத் தொண்டு செய்திருக்கிறார்கள்.

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களைத்
( தவத்திரு குன்றக்குடி அடிகளார் )
தலைவராகக் கொண்டு 1955-ல்
ஆரம்பிக்கப்பெற்று வரும் அருள்நெறித் திருப்பணி
மன்றத்தின் பணிகளும் முயற்சிகளும்

குன்றக்குடியில்

1. தெய்வசிகாமணி அருள் நெறித் தொடக்கப் பள்ளி.
2. மேற்படி பள்ளியின் மதிய உணவு மையம்.
3. திருமுருகன் அருள் நெறி ஆசிரியைப் பயிற்சிப் பள்ளி
4. மங்கையர்க்கரசி மகளிர் இல்லம்.
5. திருவாதவூரர் சிறுவர் புண்ணிய விடுதி.
6. திரு. வி. க. சிறுமியர் புண்ணிய விடுதி.
7. தேவாரப் பாடசாலை.
8. சிவகாமம் ~~பாடசாலை~~.
9. ஆதீன – தேவாலய மருத்துவ நிலையம்.
10. குஷ்ட நோய் மருத்துவ மனை.
11. ஆதீனம் தேவாலயம் நூலகம்.

12. மருது பாண்டியன் கைக்குத்தல் அரிசி கூட்டுறவு தொழிற் சங்கம்.
13. கூட்டுறவு நாணயச் சங்கம்.
14. திருக்குறள் கூட்டுறவு நல்வாழ்வுச் சங்கம்.
15. கூட்டுறவு தொழில் ஒப்பந்த சங்கம்.
16. கூட்டுறவு வீடு கட்டும் சங்கம்.
17. கூட்டுறவு பால் பண்ணை.
18. நேருஜி அட்டை காகிதப் பெட்டி, பைகள் செய்யும் கூட்டுறவு தொழிற்சாலை.
19. ஆதீன தேவாலய அருள் நெறி டிரஸ்ட் அலுவலர் கூட்டுறவு சிக்கன நாணயச் சங்கம்.
20. இசை ஞானியர் மாதர் சங்கம்.
21. திருநீறு குங்குமம் செய்யும் தொழிற்சாலை.
22. அடிகளார் உயர்நிலைப்பள்ளி.
23. நேரு மாமா சிறுவர் சங்கம்.
24. காமராசர் அருள் நெறிச் சிறுவர் பூங்கா.

பரம்பு மலையில்

25. குன்றக்குடி அடிகளார் உயர்நிலைப்பள்ளி.
26. வள்ளல் பாரி புண்ணிய விடுதி.

தேவகோட்டையில்

27. திருவள்ளுவர் அருள் நெறி தொடக்கப் பள்ளி.
28. மேற்படி பள்ளியில் மதிய உணவு மையம்.

திருப்பத்தூரில்

29. இராஜாஜி மாணவர் விடுதி (தாழ்த்தப்பட்ட பிற்பட்ட மாணவர்).

போடியில்

30. சண்முகநாதர் அருள் நெறி உயர் தொடக்கப் பள்ளி.

பேரூரில்

31. சாந்த லிங்க அடிகள் அருள் நெறி உயர் தொடக்கப் பள்ளி,

ஈரோட்டில்

32. அருள் நெறி ஆதாரப் பயிற்சிப் பள்ளி.
33. அருள் நெறி புண்ணிய விடுதி.
34. அருள் நெறி ஆரம்பப் பள்ளி.

உசிலம்பட்டியில்

35. திருமுருகன் அருள் நெறி புண்ணிய விடுதி.

கொறுக்கையில்

36. திருவள்ளுவர் அருள் நெறித் தொடக்கப் பள்ளி

அம்மன்பேட்டையில்

37. அருள் நெறி உயர் நிலைப் பள்ளி.
38. அருள் நெறி மாணவர் விடுதி.

ஆயக்காரன்புலம் 3-ம் சேத்தி

39. சரஸ்வதி அருள் நெறித் தொடக்கப் பள்ளி.

கள்ளிமந்தயத்தில்

40. அருள் நெறி உயர் நிலைப் பள்ளி.

களக்காட்டில்

41. கோமதி அருள் நெறி உயர் தொடக்கப் பள்ளி.
42. அப்பர் தேவாரப் பாடசாலை.

நான்குநேரியில்

43. திலகவதியார் தேவாரப் பாடசாலை.

குன்னூரில்

44. மலைவாழ் மக்கள் மாணவ மாணவியர் விடுதி.
45. உயர்நிலைப்பள்ளி.

பிற பணிகள்

46. மேற்கூறிய பணிகளைத் தவிர மருத்துவக் கல்லூரி, சரபோசர் கல்லூரி, அழகப்பா கல்லூரி, அண்ணாமலை பல்கலைக் கழகம் ஆகியவற்றில் பயிலும் சமயப் பற்றுடைய மாணவர்கட்கு நிதி உதவி வழங்கப் பெறுகிறது.

47. வெள்ளம், தீ போன்ற விபத்துக்களால் பாதிக்கப் பெற்றவர்களுக்கும் உதவிகள் செய்யப் பெறுகின்றன.

48. ஆதீனம் தொடர்புடைய கிராமங்களில் வழிபாட்டுக்குரிய கோயிலமைத்துக் கொடுத்தல், கிராம சாலைகள் அமைத்தல், குடி நீர்த் திட்டம் வசதி செய்தல், ஆகியவற்றிற்கு நேரிடையாக ஏற்பாடுகள் செய்கின்றன. சில இடங்களில் நிதி உதவியும் செய்யப் பெறுகிறது.

பதிப்பக வேலை

49. தமிழகம் என்ற திங்கள் இதழ் வெளியிடப் பெறுகிறது.
50. புத்தகங்கள் வெளியிடப் பெறுகின்றன.

இணைப்பு நிறுவனங்கள்

51. இராமநாதபுரம் மாவட்ட எழுத்தாளர் சங்கம்.
52. திருக்குறள் உலகப் பேரவை.
53. அரிசன சேவா சங்கம்.
54. அருள் நெறித் திருக்கூட்டம்.
55. இளைஞர் அருள் நெறி மன்றம்.
56. அருள் நெறித் திருக்கூட்டம். (மாதர் பகுதி)
57. சமய ஓவியக் கலைப் பொருட்காட்சி.

சென்னை மயிலையிலுள்ள
நமது ஆதீன திருமடத்தில்

58. சித்தாந்த வகுப்பு.

ஆணையின் வண்ணம்,
சாமி பழனியப்பன்
தனது செயலர்.

# தவத்திரு
# குன்றக்குடி அடிகளார் அவர்களின்
# நூல்கள்

1. திருவாசகத்தேன்.
2. கொடியா கொம்பா?
3. அருளியலும் அறிவியலும்.
4. தலைவர்களுக்கு பாரதி காட்டும் வழி.
5. தலைவர் பெரியாருக்கு விடைவிடை.
6. சமய மறுமலர்ச்சி.
7. முத்து மொழிகள்.
8. குறள் வாழ்வு.
9. அடிகளாரின் பொன்மொழிகள்.
10. குறட் செல்வம்.
11. அடிகளாரின் உவமைகள்.
12. அடிகளாரின் மொழியமுது.
13. திருவாசக உவமை நயம்.

---

ஆதி விநாயகர் அச்சகம், 42, ரா. கி. மடம் சாலை, சென்னை-28.